**செய்தி வெளியீடு எண் : 586** **நாள்: 12.04.2022**

# செய்தி வெளியீடு

## தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை

## ஒன்றிய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய தொழிலாளர் சட்டத் தொகுப்புகளுக்கு மாநில வரைவு விதிகள் குறித்து முதனிலை அறிவிக்கைகள் வெளியிடல்

இரண்டாவது தேசிய தொழிலாளர் ஆணையக்குழு (Second National Commission on Labour) தற்போதுள்ள தொழிலாளர் நலச் சட்டங்களை ஒருங்கிணைக்க வேண்டுமென பரிந்துரைத்ததன்பேரில், ஒன்றிய அரசு தற்போது நடைமுறையிலுள்ள 29 ஒன்றிய தொழிலாளர் சட்டங்களை உள்ளடக்கி

1) ஊதியச் சட்டத்தொகுப்பு, 2019
2) தொழில் உறவுகள் சட்டத்தொகுப்பு, 2020
3) சமூக பாதுகாப்பு சட்டத்தொகுப்பு, 2020
4) தொழில் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் பணி நிலைமைகள் சட்டத்தொகுப்பு, 2020

ஆகிய நான்கு சட்டத்தொகுப்புகளை உருவாக்கி, அவற்றை அமல்படுத்த நடவடிக்கை எடுத்துவருகிறது. இந்நான்கு சட்டத்தொகுப்புகளில் ஊதியச் சட்டத் தொகுப்புக்கு 08.08.2019 அன்றும், பிற மூன்று சட்டத்தொகுப்புகளுக்கு 29.09.2020 அன்றும் மாண்புமிகு குடியரசு தலைவர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. ஒன்றிய அரசு மேற்படி சட்டத்தொகுப்புகளுக்கு ஒன்றிய வரைவு விதிகளை தயாரித்து, ஊதியச் சட்டத்தொகுப்பிற்கு கடந்த 07.07.2020 அன்றும், தொழில் உறவுகள் சட்டத்தொகுப்பிற்கு 29.10.2020 அன்றும், சமூக பாதுகாப்பு சட்டத்தொகுப்பிற்கு 19.11.2020 அன்றும், தொழில் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் பணிநிலைமைகள் சட்டத் தொகுப்பிற்கு 13.11.2020 அன்றும் முதனிலை அறிவிக்கை வெளியிட்டுள்ளது.

இதுவரை ஊதிய சட்டத் தொகுப்பிற்கான மாநில வரைவு விதிகளை 27 மாநிலங்களும், தொழில் உறவுகள் சட்டத் தொகுப்பிற்கான மாநில வரைவு விதிகளை 23 மாநிலங்களிலும், சமூக பாதுகாப்பு சட்டத் தொகுப்பிற்கான மாநில வரைவு விதிகளை 21 மாநிலங்களும், தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பணிநிலைமைகள் சட்டத் தொகுப்பிற்கான மாநில வரைவு விதிகளை 18 மாநிலங்களும் முதனிலை அறிவிக்கையாக அந்தந்த மாநிலங்கள் தங்கள் அரசிதழ்களில் வெளியிட்டுள்ளதாக அறியப்படுகிறது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, மேற்படி சட்டத்தொகுப்புகளுக்கான மாநில விதிகளானது, சட்டத் தொகுப்புகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்குட்பட்டு ஊதிய சட்டத் தொகுப்பு, தொழில் உறவுகள் சட்டத்தொகுப்பு, தொழில் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் பணிநிலைமைகள் சட்டத் தொகுப்பு ஆகிய மூன்று சட்டத் தொகுப்புகளுக்கு மாநில வரைவு விதிகள் தயாரிக்கப்பட்டு, தற்போது கீழ்க்கண்ட தமிழக அரசின் அரசிதழ்களில் முதனிலை அறிவிக்கைகளாக வெளியிடப்பட்டுள்ளன.

1) ஊதியச் சட்டத்தொகுப்பு விதிகள் – அசாதாரண அரசிதழ் (Extra – Ordinary Gazette) Part-III, Section 1(a), No. SRO A – 8(a) / 2022 எண்.214, நாள் 11.04.2022.
2) தொழில் உறவுகள் சட்டத்தொகுப்பு விதிகள் – அசாதாரண அரசிதழ் (Extra – Ordinary Gazette) Part-III, Section 1(a), No. SRO A – 8(a) / 2022 எண்.215, நாள் 11.04.2022.
3) தொழில் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் பணிநிலைமைகள் சட்டத் தொகுப்பு விதிகள் – அசாதாரண அரசிதழ் (Extra – Ordinary Gazette) Part-III, Section 1(a), No. SRO A – 8(a) / 2022 எண்.216, நாள் 11.04.2022.

இம்முதனிலை அறிவிக்கைகளின் நகல்கள் தொழிலாளர் துறையின் www.labour.tn.gov.in என்ற இணையதளத்திலும், தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநரகத்தின் www.dish.tn.gov.in என்ற இணையதளத்திலும் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த முதனிலை அறிவிக்கைகளில் உள்ள இம்மூன்று சட்டத்தொகுப்புகளுக்குமான மாநில விதிகளால் யாருக்கேனும் பாதிப்பு ஏற்படக்கூடும் என்று கருதினால், அவர்கள் தங்களின் ஆட்சேபனைகளையும், ஆலோசனைகளையும் இவ்வரசிதழ் வெளியிட்ட நாளிலிருந்து 45 நாட்களுக்குள் ஊதிய சட்டத்தொகுப்பு விதிகள் மற்றும் தொழில் உறவுகள் சட்டத் தொகுப்பு விதிகள் குறித்த ஆட்சேபனைகளையும், ஆலோசனைகளையும் நேரடியாகவோ, தபால் மூலமாகவோ தொழிலாளர் ஆணையர், டி.எம்.எஸ். வளாகம், தேனாம்பேட்டை, சென்னை – 06 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கலாம். இது தவிர com.tnlabour@nic.in என்ற மின்னஞ்சலிலும் அனுப்பிவைக்கலாம். தொழில் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் பணிநிலைமைகள் சட்டத்தொகுப்பு விதிகள் குறித்த ஆட்சேபனைகளையும், ஆலோசனைகளையும் தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர், கிண்டி தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை - 32 என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பலாம். இது தவிர cif@tn.gov.in என்ற மின்னஞ்சலிலும் அனுப்பி வைக்கலாம்.

மேற்படி முதனிலை அறிவிக்கைகள் மீது பெறப்பட்ட ஆட்சேபனைகளையும், ஆலோசனைகளையும் மற்றும் தொடர்புடைய தொழிலாளர்கள், தொழிற்சங்கங்கள், வேலையளிப்பவர் ஆகியோர்களின் கருத்துக்களையும் பெற்று, அவற்றை பரிசீலித்து, தேவைப்படின் சட்டவிதிகளுக்குட்பட்டு, மேற்படி மாநில சட்டத் தொகுப்பு விதிகளில் உரிய திருத்தங்கள் மேற்கொண்டு மேற்படி மூன்று சட்டத் தொகுப்புகளுக்கும் அரசு இறுதி அறிவிக்கை வெளியிடும்.

சமூக பாதுகாப்பு சட்டத் தொகுப்பிற்கான மாநில வரைவு விதிகளும் தயாரிக்கப்பட்டு வருவதால், அப்பணி முடிவுற்றதும் அது குறித்தான முதனிலை அறிவிக்கை பின்னர் தனியே வெளியிடப்படும்.

**அரசு செயலாளர்,**
**தொழிலாளர் நலன் மற்றும்**
**திறன் மேம்பாட்டுத் துறை.**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

**அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :**

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in